Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள், டிசம்பர் 09, 2024 | இதழ் 240

# எடப்பாடி பழனிசாமி – துரை முருகன் காரசார விவாதம்
# டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க எதிர்ப்பு: சட்டசபையில் தனித் தீர்மானம் நிறைவேற்றம்
# நான் முதல்வராக இருக்கும் வரை அனுமதிக்க மாட்டேன்: ஸ்டாலின் உறுதிடு

சென்னை, 09 நவம்பர் 2024: மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் நாயக்கர்பட்டி கிராமத்தில் இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக ரத்து செய்திடவும், மாநில அரசின் அனுமதியின்றி எந்த சுரங்க உரிமத்தையும் வழங்கக்கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தியும் தமிழக சட்டசபையில் கொண்டு வரப்பட்ட தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டியில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்யவும், சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியின்றி, சுரங்க உரிம ஏலங்களை மேற்கொள்ளக்கூடாது என்றும், மத்திய அரசை வலியுறுத்தி முதல்வர் ஸ்டாலின் தனி தீர்மானம் கொண்டு வந்தார். நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சட்டசபையில் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

அப்போது துரைமுருகன் பேசியதாவது:

மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்த சுரங்க அனுமதியையும் வழங்கக் கூடாது. சுரங்கத்திற்கு தேர்வான பகுதி ஏற்கனவே பல்லுயிர் பெருக்கத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுரங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக அரசும், மக்களும் ஏற்க மாட்டார்கள். அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

இதனையடுத்து சட்டசபையில் தீர்மானம் மீது விவாதம் நடத்தப்பட்டது. இந்நிலையில் சட்டமன்றத்தில் டங்ஸ்டன் சுரங்கத்துக்கு எதிரான தனித் தீர்மானம் மீது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பினார். அவர் கேட்ட கேள்விக்கு அவை முன்னவர் துரை முருகன் பதிலளித்து பேசினார். இதனால் சட்டசபையில் காரசார விவாதம் நடைபெற்றது.

எடப்பாடி பழனிசாமி பேசுகையில், மக்கள் போராட்டத்திற்கு பின் வேறு வழியின்றி பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார். ஆரம்பக் காலத்திலேயே ஒப்பந்தபுள்ளி கோரும் போதே, இந்த விவரத்தை மத்திய அரசுக்கு தெரிவித்து இருந்தால், ஏலத்தை தடுத்து இருக்கலாம்.



முதல்வர், அமைச்சர் எழுதிய கடிதத்தின் முழு விபரம் வெளியிடப் படவில்லை. தமிழக மக்களை பாதிக்கும் திட்டங்களை தி.மு.க. உறுப்பினர்கள் தடுப்பதில்லை. பார்லிமென்டில் தி.மு.க. எம்பிக்கள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

மாநில உரிமைகள் பறிபோகும் போது, தி.மு.க. எம்.பி.,க்கள் ஏன் அழுத்தம் தரவில்லை. டங்ஸ்டன் சுரங்கம் விவகாரத்தில் 10 மாத காலமாக தி.மு.க. அரசு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நீங்கள் தனித்தீர்மானம் கொண்டு வருவீர்கள், அதற்கு நாங்கள் விளக்கம் கேட்க கூடாதா? அதுபற்றி நாங்கள் பேசக்கூடாதா? தலையாட்டி, தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமா? 10 மாதமாக என்ன செய்தீர்கள்? அப்போது ஏன் எதிர்க்கவில்லை? முழு விவரங்களை தராமல் தீர்மானம் போட்டல் நாங்கள் ஆமாம் போட வேண்டுமா? முதல்வர் எழுதிய கடிதத்தில் என்ன அம்சம் இருந்தது என தெரியப்படுத்தவில்லை. சட்டம் நிறைவேறிய பின் தீர்மானம் கொண்டு வந்தது எதற்காக? மனித உரிமையை காக்க பார்லிமென்டில் உரிய அழுத்தம் தராமல் என்ன செய்தீர்கள்? மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

இதற்கு அமைச்சர் துரைமுருகன் பதில் அளித்து பேசுகையில்,

எடப்பாடி பழனிசாமி திரும்பத் திரும்ப தவறான கருத்தை பதிவு செய்கிறார். மீண்டும் மீண்டும் தவறான கருத்தை பதிவிடக் கூடாது. சுரங்கத்துக்கு ஒப்பந்தம் விடுவதற்கான சட்டத்தில் மத்திய அரசு தானே ஒரு திருத்தத்தை செய்துவிட்டது. யாரையும் கேட்கவில்லை. சட்டத்தைத் திருத்திவிட்டு மத்திய அரசு என்ன சொல்கிறது என்றால், சுரங்கத்துக்கான ஏலம் விடும் அதிகாரம் மத்திய அரசுக்கே உள்ளது. மேலும், மத்திய அரசு தேர்வு செய்யும் ஏலதாரருக்கு சுரங்கத்தை குத்தகை விடும் அதிகாரம் மட்டுமே மாநிலத்துக்கு உள்ளது என்று கூறியிருக்கிறது.

எனவே, இந்த சட்டத்தின் மூலம் மாநில அரசின் சுயமரியாதைக்கு மத்திய அரசு சவால் விட்டுள்ளது. நாங்கள் தேர்ந்தெடுத்துவிட்டோம், அவர்களுக்கு சுரங்கத்தைக் கொடுங்கள் என்றால், மத்திய அரசு என்ன எஜமானர்களா? தமிழக அரசு என்ன கைகட்டி நிற்கும் வேலைக்காரனா? என்றார்.

தொடர்ந்து, சுரங்கம் அமைக்கப்படும் இடத்தின் விவரங்களை புள்ளிவிவரத்தோடு விளக்கம் கொடுத்து பதில் அளித்தோம். ஆனால், அதையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, சுரங்கத்துக்கு மத்திய அரசு ஏலம் விட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், தி.மு.க. உறுப்பினர்கள் அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்க திட்டத்திற்கு எதிராக நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். நாடாளுமன்றத்தில் கனிமவள மசோதா நிறைவேறும் போது, தி.மு.க. எதிர்ப்பை பதிவு செய்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் தவறான தகவலை அவையில் பதிவு செய்யக் கூடாது. எங்களின் ஆதரவுடன் அந்த சட்டம் நிறைவேறவில்லை என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும்.

தி.மு.க. அரசு மக்களின் எந்த பிரச்சினையிலும் அலட்சியமாக இருக்கவில்லை. இந்த அரசை பொருத்தவரையில் அரிட்டாபட்டி சுரங்கத்திற்கு அனுமதி வழங்க மாட்டோம். உறுதியாக சொல்கிறேன். நான் முதலமைச்சராக இருக்கிறவரை நிச்சயமாக மத்திய அரசு இந்தத் திட்டத்தை கொண்டுவர முடியாது. அது வந்தாலும் தடுத்தே தீருவோம் என்றார்.

இதனையடுத்து அமைச்சர் துரைமுருகன் பேசுகையில், சட்டத்தை திருத்தி டங்ஸ்டன் ஏலம் விடும் அதிகாரத்தை மத்திய அரசு எடுத்தது. தவறான செய்திகளை திருப்பி திருப்பி பதிவு செய்யக்கூடாது. மத்திய அரசுக்கு கைகட்டி நிற்கும் வேலைக்காரனா மாநில அரசு. மத்திய அரசு மாநில அரசின் சுயமரியாதைக்கு சவால் விடுத்தது.

ஆண்டான் அடிமை மனநிலையில் மத்திய அரசு செயல்படுகிறது. டங்ஸ்டன் சுரங்கத்தை தடுக்க மாநில அரசு அனைத்து நடவடிக்கையும் எடுத்தது. ஏலம், குத்தகை உரிமையை மாநில அரசுக்கு அளிக்க கோரி கடிதம் எழுதினேன் என்றார். அமைச்சர் கடிதம் எழுதியது எங்களுக்கு எப்படி தெரியும் என எடப்பாடி எதிர் கேள்வி எழுப்பினார்.

நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது எத்தனை கடிதத்தை வெளியிட்டீர்கள். கடிதங்களில் இருந்த விபரங்களை அவையில் கூறி விட்டேன் என்று துரைமுருகன் கூறினார்.

பின்னர் மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு எதிராக சட்டசபையில் கொண்டு வரப்பட்ட தனித்தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அப்பாவு அறிவித்தார்.

# விசிக கட்சியிலிருந்து ஆதவ் அர்ஜுனா 'சஸ்பெண்ட்'

சென்னை, 09 நவம்பர் 2024: விசிக துணைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவை 6 மாத காலத்திற்கு இடைநீக்கம் செய்து அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் இன்று அறிவித்துள்ளார்.

'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை சென்னையில் நடைபெற்றது. இதில், அம்பேத்கரின் பேரன் ஆனந்த் டெல்டும்டே, விசிக துணை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, தவெக தலைவர் விஜய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




இந்த விழாவில் ஆதவ் அர்ஜுனா மற்றும் விஜய் பேசியவை தற்போது பெரும் விவாதமாக மாறியுள்ளது. குறிப்பாக ஆதவ் அர்ஜுனா இந்த விழாவில், "மன்னர் பரம்பரையை உருவாக்க இனி தமிழகம் ஒருபோதும், இடம் தராது. மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. இன்று மன்னர் பரம்பரையை ஒழிப்பதற்கு அம்பேத்கரின் சிந்தனைகள் நமக்குத் தேவைப்படுகிறது. 2026 தேர்தலுக்கான பணிகள் மன்னர் ஆட்சியை ஒழிக்க வேண்டும்" என்று பேசியிருந்தார். இது அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தப் பேச்சு நேரடியாக திமுக மீது வாரிசு அரசியல் குற்றச்சாட்டை வைத்து விமர்சனம் செய்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து பல முறை விளக்கம் அளித்த விசிக தலைவர் திருமாவளவன், தலித் அல்லாதவர் மீது நடவடிக்கை எடுக்கும் முன் தலைவர், பொதுச்செயலாளர் உள்ளிட்ட உயர்நிலைக்குழு ஆலோசனை நடத்தும். அதன் பிறகு ஒன்றுக்கு இரு முறை ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், நேற்று இரவு செய்தியாளர்களைச் சந்தித்த திருமாவளவன், ஆதவ் அர்ஜுனாவின் அண்மைக்கால செயல்பாடுகள் கட்சி நலன்களுக்கு எதிராக இருப்பதாக கட்சியின் முன்னணி நிர்வாகிகள் தலைமையின் கவனத்துக்கு கொண்டு வந்திருப்பதாகவும் இதுகுறித்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் ஆதவ் அர்ஜுனாவை 6 மாத காலத்திற்கு சஸ்பெண்ட் செய்து தொல். திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இது குறித்து விசிக வெளியிட்டுள்ள அறிக்கையில், "கட்சியின் துணை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா அண்மைக் காலமாக கட்சியின் நலன்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறார் என்பது தலைமை நிர்வாகத்தின் கவனத்துக்குத் தெரிய வந்தது. இது குறித்து கட்சியின் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட முன்னணித் தோழர்களுடன் கலந்தாய்வு செய்யப்பட்டது.



கட்சித் தலைமையின் அறிவுறுத்தல்களையும் மீறி, தொடர்ச்சியாக அவர் எதிர்மறையாக செயல்பட்டு வருவதும்; அத்தகைய செயல்பாடுகள், மேலோட்டமாக நோக்கினால் கட்சியின் நலன் மற்றும் அதிகார வலிமைக்கானதாகத் தோன்றினாலும்; அவை கட்சி மற்றும் தலைமையின் மீதான நன்மதிப்பையும் நம்பகத்தன்மையையும் கேள்விக் குறியாக்கும் வகையில், பொதுவெளியில் கடுமையான விமர்சனங்களை உருவாக்கியிருக்கிறது.

இத்தகைய சூழலைக் கருத்தில் கொண்டு, கட்சியின் நலன்களை முன்னிறுத்தி, கட்சித் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்கள் ஆகிய மூவர் உள்ளடங்கிய தலைமை நிர்வாகக் குழுவில், ஆதவ் அர்ஜுனா மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஆதவ் அர்ஜுனா கட்சியிலிருந்து 6 மாத காலத்துக்கு இடைநீக்கம் செய்யப்படுகிறார்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11, SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
திங்கள், டிசம்பர் 09, 2024

# "படையாண்ட மாவீரா"

## நாயகன் கௌதமனுடன் மோதும் ஆறு எதிர் நாயகர்கள்



சென்னை, 09 நவம்பர் 2024: வி.கே.புரடக்ஷன்ஸ் குழுமம் மிக பிரமாண்டமாக தயாரிக்கும் படையாண்ட மாவீரா திரைப்படத்தின் கதை, திரைக்கதை எழுதி இயக்கி நாயகனாக நடிக்கிறார் வ.கௌதமன். கனவே கலையாதே, மகிழ்ச்சி வெற்றிப் படங்களை தொடர்ந்து வ.கௌதமன் நாயகனாக நடிக்கும் இரண்டாவது திரைப்படம் படையாண்ட மாவீரா.

மண்ணையும் மக்களையும் காக்க வீரம் ஈரம் அறத்துடன் போராடி வாழ்ந்த ஒரு மாவீரனைப் பற்றிய உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் இப்படைப்பில் படையாண்ட மாவீரனாகவே வாழும் வ.கௌதமனுக்கு எதிர் நாயகர்களாக (வில்லன்களாக) மன்சூரலிகான், "ஆடுகளம்" நரேன், "பாகுபலி" பிரபாகர், "வேதாளம்" கபீர், மதுசூதனராவ், தீனா என ஆறு பேர் மோதுகின்றனர்.

பரபரப்பான திருப்பங்களுடன் கூடிய இப்படைப்பில் நெருப்பு தகிக்கும் நான்கு சண்டைக் காட்சிகளை ஸ்டண்ட் சில்வா வடிவமைக்க நடனக் காட்சிகளை டான்ஸ் மாஸ்டர் தினேஷ் காட்சிப் படுத்தியுள்ளார். மேலும் படையாண்ட மாவீராவில் மிக முக்கிய கதாப்பாத்திங்களாக சமுத்திரக்கனி, சரண்யா பொன்வண்ணன், "ரெடின்" கிங்ஸ்லி, "நிழல்கள்" ரவி, இளவரசு, தமிழ் கௌதமன், "தலைவாசல்" விஜய், ஏ.எல். அழகப்பன் ஆகியோரோடு பூஜிதா நாயகியாக நடிக்கிறார். பேரழகான இசையை ஜி வி. பிரகாஷ் குமாரும், பாடல்களை ' "கவிப்பேரரசு" வைரமுத்து அவர்களும் வழங்கியுள்ளனர். ஒளிப்பதிவு வெற்றிவேல் மகேந்திரன், கோபி ஜெகதீஸ்வரன், கலை மோகன், வசனம் பாலமுரளி வர்மன், படத்தொகுப்பு ராஜா முகமது, ஸ்டில்ஸ் அன்பு, மக்கள் தொடர்பு நிகில் கவனிக்கின்றனர்.

இப்படைப்பைப் பற்றி இயக்குநர் வ.கௌதமன் " என் வாழ்நாள் லட்சியமே தமிழர்களின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத சந்தனக்காடு, முந்திரிக்காடு, வன்னிக்காடுகளில் வாழ்ந்த மாவீரர்களின் வரலாற்றை படைப்பாக்கி ஒரு தரிசனமாக இவ்வுலகிற்கு தருவது மட்டுந்தான். சந்தனக்காட்டு மாவீரன் வீரப்பனை படைத்துவிட்டேன். முந்திரிக்காடும் வன்னிக்காடும் மட்டுமே மீதமுள்ளது. தமிழ் மண்ணில் ஆகப் பெரும் பேரதிர்வுகளை உருவாக்கப் போகும் இப்படைப்பு உன்னையும் இந்த மண்ணையும் காக்க ஒருத்தாய் மக்களாக நில்லுங்கள்" என்று உரக்கப் பேச வருகிறது. "மாவீரம்" சுமந்த இப்பெரு வரலாற்றின் படப்பிடிப்பு இதுவரை 76 நாட்கள் நடைபெற்று மீதமுள்ள ஐந்து நாட்கள் மெய்சிலிர்க்கும் இறுதிக்கட்ட படப்பிடிப்பு க்காக படையாண்ட மாவீரா குழு தயாராகிக் கொண்டிருக்கிறது என உற்சாக நெகிழ்வோடு பேசி நிறைவு செய்கிறார்.

# ஆகோள் மூன்றாம் பாகம் 2026ஆம் ஆண்டு வெளியாகும்

## தமிழ் இலக்கியச் செம்மல் விருது பெற்ற எழுத்தாளர் கபிலன்வைரமுத்து பதிவு




சென்னை, 09 நவம்பர் 2024: ஆங்கிலேய அரசின் குற்றப் பரம்பரை சட்டத்தை மையமாகக் கொண்டு கபிலன்வைரமுத்து எழுதி 2022ஆம் ஆண்டு வெளி வந்த நாவல் ஆகோள். பொதுமக்களைக் குற்றவாளிகளாக நடத்தும் போக்கு இன்றளவும் உலக அரசியலில் இருக்கிறது என்ற கருத்தை ஒரு டைம் டிரேவல் கதைவழி சொல்லிய புத்தகம். ஆகோள் ஆங்கிலத்திலும் வெளியாகி வரவேற்பு பெற்றது. இதனிடையே ஆகோள் நாவலின் இரண்டாம் பாகமான மாக்கியவெல்லி காப்பியம் இந்தாண்டு வெளியானது. எதிர்காலத்தில் அறிவியலின் துணை கொண்டு அதிகார மையங்கள் மக்களின் சிந்தனைகளை எப்படியெல்லாம் அடிமைப்படுத்தக்கூடும் என்பதை மாக்கியவெல்லி காப்பியம் பேசியிருக்கிறது. குற்றப்பரம்பரை சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மதுரை எட்டு நாடுகளின் வரலாறு இதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகோள் மற்றும் மாக்கியவெல்லி காப்பியம் நூல்கள் பாவை கல்வி நிறுவனங்களின் சிறந்த அறிவியல் புதினம் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டு கபிலன்வைரமுத்துவுக்கு தமிழ் இலக்கியச் செம்மல் விருது வழங்கப்பட்டது. தற்போது கபிலன்வைரமுத்து தன் இன்ஸ்டாகிராமில் ஆகோள் மூன்றாம் பாகத்திற்கான ஆய்வுப்பணிகள் தொடங்கியிருப்பதாக பதிவிட்டிருக்கிறார். இந்த நூல் 2026 ஆம் ஆண்டு வெளியாகும் என்பதையும் அதில் குறிப்பிட்டிருக்கிறார். தமிழில் ஒரு நாவல் மூன்று பாகங்களாக எழுதப்படுவது மிக அரிது. கபிலன்வைரமுத்துவின் முந்தைய நாவலான மெய்நிகரி கே.வி.ஆனந்த் இயக்கத்தில் கவண் என்ற திரைப்படமாக வெளிவந்தது. ஆகோள் நாவல்களும் திரைப்படங்களாகுமா? குற்றப்பரம்பரை கதைகள் திரைக்கு வருவது கபிலன்வைரமுத்துவின் ஆகோள் மூலம் நிறைவேறுமா என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# ரோட்டரி கிளப் ஆஃப் வேளச்சேரி மற்றும் மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## இணைந்தது 10,000 மரக்கன்றுகள் நடப்பட்டன, உலக சாதனைக்கான முயற்சியை படைத்தது



சென்னை, 09 நவம்பர் 2024: ரோட்டரி கிளப் ஆஃப் வேளச்சேரியுடன் மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்தது மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் 10,000 மரக்கன்றுகளை நடப்பட்டு மாபெரும் மரம் நடும் இயக்கமாக இன்று உலக சாதனை முயற்சியை படைத்தது.

"மகிழங்காடு - மண்ணின் மரங்கள்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வு, நகர்ப்புற வனவியல் மற்றும் "பசுமையாக்குவோம்" ("கோ கிரீன்") பணியை மேம்படுத்துவதும், பசுமையான மற்றும் நிலையான எதிர்காலத்திற்கு பங்களிப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை விருந்தினர்களாக ரோட்டேரியன் பி டி ஜி கலைமாமணி திரு. அபிராமி ராமநாதன், ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சென்ட்ரல், கல்வி வேந்தர் லயன் டாக்டர் எஸ். பீட்டர், மாதா குழும நிறுவனங்களின் நிறுவனர் & தலைவர் மற்றும் திரு தீபக் ஸ்ரீவஸ்தவா, ஐ.எஃப்.எஸ்., கூடுதல் முதன்மை தலைமை பாதுகாவலர் மற்றும் உறுப்பினர் செயலாளர், தமிழ் நாடு மாநில சதுப்பு நில ஆணையம் மற்றும் தலைமை பணி இயக்குனர், பசுமை தமிழ்நாடு. அவர்கள் மற்றும் திரு. பாலச்சந்தர், டி, தலைவர், ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை வேளச்சேரி கலந்து கொண்டனர்.

இவர்களின் வழிகாட்டுதலின், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான உறுதிப்பாட்டின் அடையாளமாக, வளாகம் முழுவதும் 10,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் இதில் 500 க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள மாணவர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகள் நடுவதில் தீவிரமாக பங்கேற்றனர்.

ரோட்டேரியன் பி டி ஜி கலைமாமணி திரு. அபிராமி ராமநாதன், ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் சென்ட்ரல் கூறுகையில், "இன்று நாம் நடும் ஒவ்வொரு மரக்கன்றும் எதிர்காலத்திற்கான நம்பிக்கையின் விளக்காக நிற்கிறது. நாம் நட்ட ஒவ்வொரு மரக்கன்றும் சுத்தமான காற்று, சிறந்த தட்பவெப்பம் மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கு ஆரோக்கியமான சூழலை நோக்கிய ஒரு படியாகும்.

கல்வி வேந்தர் லயன் டாக்டர் எஸ். பீட்டர், மாதா குழும நிறுவனங்களின் நிறுவனர் & தலைவர் கூறுகையில், "இன்று நாம் 10,000 மரக்கன்றுகளை நட்டுள்ளோம், இது இயற்கையை வளர்ப்பதற்கும் பசுமையான, ஆரோக்கியமான உலகத்தை உருவாக்குவதற்கான நமது அர்ப்பணிப்பை குறிக்கிறது. பசுமை மற்றும் சுற்றுச்சூழல் செழிக்க செய்து, வளரும் உலகை உருவாக்க நாம் ஒன்றிணைவோம். இன்று நடப்படும் ஒவ்வொரு மரக்கன்று நாளைய மரபு என்பதை இது போன்ற முயற்சிகள் நமக்கு நினைவூட்டுகிறது."

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்த, பங்கேற்ற அனைத்து மாணவர்ககளை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொருக்கும் பங்களிப்பு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த கூட்டு முயற்சியானது சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதிலும், பசுமையான நாளைய சமூக விழிப்புணர்வை வளர்ப்பதிலும் நகர்ப்புற காடுகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# தயாரிப்பாளர், விநியோகஸ்தர், நடிகர் ஜே எஸ் கே இயக்குநர் அவதாரம்

## எடுத்துள்ள திரில்லர் திரைப்படமான 'ஃபயர்' இசை வெளியீடு



சென்னை, 09 நவம்பர் 2024: பாலாஜி முருகதாஸ், ரச்சிதா மகாலட்சுமி, சாக்ஷி அகர்வால், காயத்ரி ஷான், சாந்தினி தமிழரசன், சிங்கம் புலி, சுரேஷ் சக்ரவர்த்தி மற்றும் பத்மன் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கும் இப்படம் தமிழகத்தையே உலுக்கிய ஒரு உண்மை சம்பவத்தால் உந்தப்பட்ட விறுவிறுப்பான திரில்லர் ஆகும். ஜே எஸ் கே ஃபிலிம் கார்ப்பரேஷன் பேனரில் தயாராகும் 'ஃபயர்' திரைப்படத்திற்கு டிகே (அறிமுகம்) இசையமைத்துள்ளார். சதீஷ் ஜி பாபு ஒளிப்பதிவு செய்துள்ளார். இயக்குநரும் பிரபல வசனகர்த்தாவுமான எஸ் கே ஜீவா வசனங்களை எழுதியுள்ளார். படத்தொகுப்பை சி எஸ் பிரேம் குமாரும் கலை இயக்கத்தை தேவராஜும் கையாள, பாடல்வரிகளை 'கே ஜி எஃப்' புகழ் மதுரகவி இயற்றியுள்ளார், மானஸ் நடனம் அமைத்துள்ளார்.

நடிகை சாக்ஷி அகர்வால் பேசியதாவது...

"இந்த படம் ஒரு துணிச்சலான முயற்சி. இன்றைய சமுதாயத்திற்கு மிகவும் அவசியமான கருத்தை இது சொல்கிறது. அதே சமயம் இளைஞர்கள் ரசிக்கும் வகையில் இப்படம் அமைந்துள்ளது இந்த கருவை கையில் எடுத்ததற்காக ஜே எஸ் கே அவர்களுக்கு நன்றி. அனைவரும் இப்படத்திற்கு ஆதரவு தாருங்கள்."

நடிகர் பாலாஜி முருகதாஸ் பேசியதாவது...

"இது கிட்டத்தட்ட எனக்கு முதல் படம் மாதிரி தான். களி மண்ணுக்கு மதிப்பில்லை. ஆனால் அதை பானையாகவோ பொம்மையாகவோ செய்தால் அதன் மதிப்பே வேறு. அது போல் என்னை இப்படத்தில் இயக்குநர் ஜே எஸ் கே மற்றும் இதர குழுவினர் செதுக்கி உள்ளார்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி." தயாரிப்பாளர் டி சிவா பேசியதாவது...

"நினைத்ததை முடிப்பதில் ஜே எஸ் கே வல்லவர். துணிச்சல் மிகுந்தவர், தன்னம்பிக்கை மிக்கவர், ஆளுமை உள்ளவர், அன்பானவர். அவர் இயக்கிய முதல் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பங்கேற்பது மிக்க மகிழ்ச்சி. பாடல்களும் முன்னோட்டமும் மிகவும் அருமையாக உள்ளன. இந்த படம் மாபெரும் வெற்றி அடைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்."

ஃபயர் திரைப்படத்தின் இயக்குநர் ஜே எஸ் கே பேசியதாவது...

"என் மீது அன்பு கொண்டு இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம், நன்றி. இந்த படம் எனக்கு ரொம்பவே ஸ்பெஷல். இப்படம் உருவாக தங்கள் சிறப்பான பங்களிப்பை அளித்த எங்கள் குழுவினர் ஒவ்வொருவருக்கும் நன்றி. பொதுவாக திரைப்பட நிகழ்ச்சிகளில் உதவி இயக்குநர்களுக்கு பேச வாய்ப்பு கிடைக்காது. ஆகையால் எனது உதவி இயக்குநர்களை ஒரு சில வார்த்தைகள் பேச அன்புடன் மேடைக்கு அழைக்கிறேன். இந்த படத்தை இது வரை பார்த்த அனைவரும் பெரிதும் பாராட்டி உள்ளனர். ஃபயர் அனைவருக்கும் புடிக்கும். வந்திருக்கும் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை மிக்க நன்றி.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சாய் லைஃப் சயின்சஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளின் ஆரம்பப் பொது வழங்கல் டிசம்பர் 11,2024 அன்று திறக்கப்படும்

சென்னை, 09 நவம்பர் 2024: சாய் லைஃப் சயின்சஸ் லிமிடெட் ("சாய் லைஃப்" அல்லது "தி கம்பெனி"), டிசம்பர் 11, 2024 புதன் அன்று ஈக்விட்டி பங்குகளின் ஆரம்பப் பொது வழங்கல் ("வழங்கல்") தொடர்பாக ஏலம் / வழங்கல் காலத்தைத் திறக்க முன்மொழிகிறது,

.

நிறுவனத்தால் செய்யப்பட்ட ரூ.9,500 மில்லியன் ("புதிய வெளியீடு") வரையிலான பங்குகளின் புதிய வெளியீடு மற்றும் சில நிறுவனத்தின் தற்போதைய பங்குதாரர்களால் செய்யப்பட்ட 38,116,934 வரையிலான ஈக்விட்டி பங்குகளின் ("விற்பனைக்கான வழங்கல் ") விற்பனை செய்வதற்கான வழங்கல் ஆகியவற்றை இந்த வழங்கல் உள்ளடக்கியது. ("விற்பனை செய்யும் பங்குதாரர்கள்"). ("மொத்த வழங்கல் அளவு")

7,200 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தால் பெறப்பட்ட அனைத்து அல்லது குறிப்பிட்ட நிலுவையில் உள்ள கடன்களின் முழுமையாக அல்லது பகுதியாக, திருப்பிச் செலுத்துதல்/முன்கூட்டிய செலுத்துதல் மற்றும் மீதமுள்ள தொகை பொது நிறுவன நோக்கங்களுக்காக இந்த நிகர வருவாயைப் பயன்படுத்த இந்த நிறுவனம் முன்மொழிகிறது. ("வழங்கலின் நோக்கங்கள்")

இந்த விற்பனைக்கான வழங்கல், சாய் குவெஸ்ட் சின் பிரைவேட் லிமிடெட் ("உருவாக்குநர் விற்பனை செய்யும் பங்குதாரர்") வழங்கும் 6,454,780 வரையிலான ஈக்விட்டி பங்குகள், டிபிஜி ஆசியா 7 எஸ்எஃப் பிரைவேட் லிமிடெட் வழங்கும் 23,159,368 வரையிலான எச்பிஎம் பிரைவேட் ஈக்விடி இந்தியா வழங்கும் 6,210,186 வரையிலான ஈக்விட்டி பங்குகள், (ஒட்டுமொத்தமாக, "முதலீட்டாளர் விற்பனை செய்யும் பங்குதாரர்கள்") மற்றும் பாரதிஶ்ரீவாரி வழங்கும் 650,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், அனிதா ருத்ரராஜு நந்தியாலா வழங்கும் 500,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், ராஜு பென்மஸ்டா வழங்கும் 500,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், டாக்டர் டிர்க் வால்டர் சர்டார் வழங்கும் 250,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், ஜெகதீஷ் விஸ்வநாத் டோர் வழங்கும் 245,100 வரையிலான ஈக்விட்டி பங்குகள் ராஜகோபால் ஶ்ரீராம தத்தா வழங்கும் 62,500 வரையிலான ஈக்விட்டி பங்குகள், கே பாண்டு ரங்கா ராஜு வழங்கும் 80,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள் மற்றும் வெங்கட நரசிம்ம சாஸ்திரி ரென்டுசிண்டாளா வழங்கும் 5,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள் (மொத்தமாக மற்ற விற்பனை செய்யும் பங்குதாரர்கள்") ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

ஆங்கர் முதலீட்டாளர் ஏலம்/வழங்கல் காலம் டிசம்பர் 10, 2024 செவ்வாய் அன்று தொடங்கி முடிவடையும். இந்த ஏலம்/வழங்கல் காலம் சந்தாவுக்காக டிசம்பர் 11, 2024 புதன்கிழமையன்று திறக்கப்பட்டு டிசம்பர் 13, 2024 வெள்ளிக்கிழமையன்று முடிவடையும். ("ஏல விவரங்கள்")

இந்த வழங்கலின் விலை வரம்பு ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ.522 முதல் ரூ. 549 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது ("விலை வரம்பு"). ஒரு குறைந்த பட்சஞ்ஈக்விட்டி பங்குகள் மற்றும் அதன் பிறகு ஞ்ஈக்விட்டி பங்குகளின் மடங்குகளில் ஏலம் எடுக்கலாம். ("ஏலத்தொகுதி ").

இந்த ஈக்விட்டி பங்குகள் தெலுங்கானா ஹைதராபாத்தில் உள்ள நிறுவனங்களின் பதிவாளர் ("ஆர் ஓ சி") உடன் தாக்கல் செய்யப்பட்ட டிசம்பர் 5, 2024 தேதியிட்ட நிறுவனத்தின் ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் வழங்கப்படுகின்றன. இந்த ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ் மூலம் வழங்கப்படும் ஈக்விட்டி பங்குகள் பிஎஸ்இ லிமிடெட் ("பி எஸ் ஈ") மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ("என் எஸ் ஈ" பி எஸ் ஈ உடன் சேர்த்து, "ஸ்டாக் எக்ஸ்சேஞ்சஸ்") ஆகிய பங்குச் சந்தைகளில் பட்டியலிட முன்மொழியப்பட்டுள்ளது. இந்த வழங்கலின் நோக்கங்களுக்காக, என் எஸ் ஈ என்பது நியமிக்கப்பட்ட பங்குச் சந்தையாகும். ("பட்டியல் விவரங்கள்")

கோடக் மஹிந்திரா கேபிடல் கம்பெனி லிமிடெட், ஐஐஎஃப்எல் கேபிடல் சர்வீசஸ் லிமிடெட் (முன்னர் ஐ ஐ எஃப் எல் செக்யூரிட்டீஸ் லிமிடெட் என அறியப்பட்டது), ஜெஃப்ரிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் மோர்கன் ஸ்டான்லி இந்தியா கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஆகியவை இந்தச் வழங்கலின் ("பிஆர்எல்எம்ஸ்") புக் ரன்னிங் லீட் மேனேஜர் ஆவர்.

# வேளச்சேரியின் 6 துளை கால்வாய் மேம்பாடு: திட்ட பங்கேற்பாளர்களுடன் கூட்டத்தை நடத்த சென்னை பெருநகர மாநகராட்சி முடிவு

சென்னை, 09 நவம்பர் 2024: வேளச்சேரியிலுள்ள 6 துளை கால்வாய் மேம்பாட்டு திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்பவர்களுடனான கூட்டத்தை நடத்த பெருநகர சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

சென்னை பெருநகர மாநகராட்சியின் ஆய்வு அடிப்படையில், அடையாறு மண்டலத்தில் உள்ள வேளச்சேரியில் அமைந்துள்ள ஆறு-துளை கால்வாய் மேம்படுத்தல் தொடர்பாக பங்கெடுத்து கொள்பவர்களுடனான சந்திப்பை நடத்த உள்ளது. இதில், ஆர்வமுள்ள தனிநபர்கள், வேளச்சேரி குடியிருப்பாளர்கள் மற்றும் அரசு அல்லாத அமைப்புகள் பங்கெடுத்துக்கொள்ளலாம் என மாநகராட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று கூறியுள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான மாநகராட்சியின் ஆய்வில், ரூ.15 கோடியில் திட்டத்தை நடைமுறைப்படுத்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் நீர்நிலையின் கரையில் மூங்கில் கன்றுகளை நடுதல், பொதுமக்கள் அமரும் வசதிகளை உருவாக்குதல், நடைபாதை மற்றும் சைக்கிள் பாதையை அமைத்தல் போன்ற திட்டங்கள் இந்த மதிப்பீட்டில் உள்ளன. ஃபெஞ்சல் புயல் காரணமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட வடிநீர் குழாய்களை சிமெண்ட் குழாய்களாக மாற்றுவது உள்ளிட்டவையும் இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். இந்த திட்டத்திற்காக பங்குதாரர்களுடன் நடத்தப்படும் சந்திப்பில் விவாதிக்கப்படும் கருத்துக்களும் இந்த திட்டத்தில் சேர்க்கப்படும் என்று அதிகாரிகள் கூறி உள்ளனர்.

இந்த மண்டலத்தில் அடையாளம் காணப்பட்ட மற்ற திட்டங்களில் 'பெருங்குடி உலா' வும் அடங்கும். இதன் மூலம் பொதுமக்களுக்கான சுற்றுச்சூழல் சார்ந்த விரைவு போக்குவரத்து அமைப்பை வலுப்படுத்துவதுடன், ஏரிகளுடன் கூடிய குடியிருப்பு வாழ்விடங்களையும் உருவாக்கும். இந்த பாதையில் நடைபாதைகள் மற்றும் சைக்கிள் பாதைகள், பொது போக்குவரத்து பகுதிகள் மற்றும் நீல-பச்சை அமைப்புகள் ஆகியவை இடம்பெறும் என்றும் கூறப்படுகிறது.

இது சுற்றுச்சூழல் உணர்திறன் வாழ்விடங்களை ஊக்குவிக்கும் அதே வேளையில், ஏரிகள் மற்றும் சுற்றுப்புறங்களுக்கான அணுகலை மேம்படுத்தும் என்று ஆய்வு கூறுகிறது. பல்லுயிர் பெருக்கம், நீர் தக்கவைப்பு மற்றும் சமூக தொடர்புகளை மேம்படுத்த நடைபாதை மற்றும் சைக்கிள் ஓட்டுவதற்கான பாதைகள், பொது போக்குவரத்து பகுதிகள், பொதுத் தளம் மற்றும் தெரு மேம்பாடுகள்', '200 மீட்டர் தொலைவில் பன்முக போக்குவரத்து கட்டமைப்புகளை ஒருங்கிணைத்தல்' ஆகியவையும் அடங்கும்.

சென்னை பெருநகர மாநகராட்சி, குறிப்பு விதிமுறைகளை உருவாக்கி, திட்டத்திற்கான நிதி முன்மொழிவைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. சென்னை பெருநகர மாநகராட்சி, தென்னக ரெயில்வே மற்றும் தனியார் பங்குதாரர்களால் நிர்வகிக்கப்படும் பகுதிகளை உள்ளடக்கிய நில உரிமை போன்ற முக்கிய அம்சங்களை இது உள்ளடக்குகிறது. அடுத்தகட்டமாக, இந்த திட்டத்தின் பங்குதாரர்களுடைய ஆலோசனைகளின் உள்ளீடுகள் மற்றும் திட்டத்தின் கட்டமைப்பை இறுதி செய்வதன் மூலம் வடிவமைக்கப்படும் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# சாம்சங் ஈ.டி.ஜி.ஈ சீசன் 9 இன் வெற்றியாளர்கள் ஜியோ டார்கெட்டிங் மற்றும் ஜென்இசட் ஹாட்ஸ்பாட் டேகிங்கில் பலதரப்பட்ட புத்தாக்கங்களுடன் தொழில்நுட்ப தீர்வுகளை மறுவரையறை செய்துள்ளனர்




கோயம்புத்தூர், 09 நவம்பர் 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் வருடாந்திர முதன்மை வளாகத் திட்டமான சாம்சங் ஈ.டி.ஜி.ஈ. (எம்பவரிங் ட்ரீம்ஸ் கெய்னிங் எக்சலன்ஸ்)ஒன்பதாவது பதிப்பில் வணிக புத்திசாலித்தனம், மூலோபாய சிந்தனை மற்றும் தலைமைத்துவ திறன்களுடன் சிறந்து செயலாற்றி வெற்றியாளர்களை அறிவித்துள்ளது. இந்த ஆண்டு, உயர்மட்ட பி-பள்ளிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் வடிவமைப்பு பள்ளிகள் உட்பட 40 முதன்மையான வளாகங்களில் இருந்து 15,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். நாட்டின் சில சிறந்த மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர் மற்றும் புதுமை மற்றும் ஒத்துழைப்பின் உணர்வை வெளிப்படுத்தி, நுண்ணறிவு பரிமாற்றங்களில் ஈடுபட்டனர். குருகிராமில் நடைபெற்ற இறுதி நிகழ்வில், சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் தலைவர் மற்றும் சி ஈ ஓ திரு.ஜெ பி பார்க் மற்றும் சாம்சங் இந்தியாவின் பிற மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

"சாம்சங் நிறுவனத்தில், நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் புதுமையே மூலக்கல்லாகும். பல ஆண்டுகளாக, சாம்சங் எட்ஜ் தொடர்ந்து மாணவர்களுக்கு திறனளித்து வருகிறது, மேம்பட்ட நுகர்வோர் அனுபவத்திற்காக அவர்களின் ஆக்கப்பூர்வமான தீர்வுகளை வெளிப்படுத்தும் தளத்தை வழங்குகிறது. இந்த ஆண்டு, இன்னும் அதிகமான மாணவர்கள் மற்றும் வளாகங்களில் இருந்து பெரும் வரவேற்பு மற்றும் பங்கேற்பால் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம், இது உண்மையிலேயே ஊக்கமளிக்கிறது. இந்த இளம் மனங்களில் புதுமை மற்றும் சிக்கலைத் தீர்க்கும் மனப்பான்மை செழித்து வளர்வதைக் காண்பது உற்சாகமாக இருந்தது," என்று சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் தலைவர் மற்றும் சி ஈ ஓ ஜெ பி பார்க் கூறினார். எக்ஸ் எல் ஆர் ஐ ஜாம்ஷெட்பூரின் அணி ஆர் எஸ் பி தேசிய வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான அதன் புதுமையான உத்தி நடுவர் மன்றத்தைக் கவர்ந்தது. ஆர் எஸ் பி யின் யோசனையில் பிராண்ட் சின்னங்கள், ஜியோ-டார்கெட்டிங், ஜென் எம்இசட் ஹாட்ஸ்பாட் டேகிங் மற்றும் மால் ஆக்டிவேஷன்கள் ஆகியவை அடங்கும் - இவை அனைத்தும் புதுமையான, உள்ளூர்மயமாக்கப்பட்ட மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட அனுபவங்கள் மூலம் ஆழ்ந்த நுகர்வோர் இணைப்புகளை உருவாக்குவதற்கும் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும் ஏற்றது. பிரஞ்சலி பாட்டியா, சித்தார்த்தா த்விவேதி, ரோஹன் பரத்வாஜ் ஆகியோர் அடங்கிய குழுவினர் சாம்சங்கின் முதன்மை ஸ்மார்ட்போன்கள் மற்றும் சாம்சங் வழங்கும் முன் வேலை வாய்ப்பு சலுகைகள் உட்பட 450,000 ரூபாய் ரொக்கப் பரிசையும் பெற்றனர், ஜாம்ஷெட்பூரின் எக்ஸ் எல் ஆர் ஐ இலிருந்து செவி67 அணி ஸ்மார்ட் ஹோம் சந்தைக்கான உத்தியுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. முன்மொழியப்பட்ட யோசனை, அமலாக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட, எதிர்காலத்திற்குத்-தயாரான சூழல் அமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது, இது அவர்களின் கொள்முதல் பயணத்தில் வழிகாட்டுவதன் மூலம் உலகளவில் பயனர் அனுபவத்தை நெறிப்படுத்துகிறது. அபூர்வா மிட்டல், சயான் பானர்ஜி, சுபம் திரிபாதி அகியோர் அடங்கிய குழுவினருக்கு ரூ. 300,000 ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபாரின் டிரேட், கல்கத்தாவைச் சேர்ந்த பீனிக்ஸ் அணி மூன்றாவது இடத்தைப் பிடித்தது. 'ஸ்பின் டு வின்' ஸ்மார்ட் கியூ ஆர் குறியீடுகள், நிலையான வடிவமைப்புடன் எல்லையற்ற அனுபவங்கள், பரீட்சார்த்த ரீடெயல் விற்பனை மற்றும் நிலைத்தன்மையின் மூலம் பிராண்ட் ஈடுபாட்டை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட அவர்களின் முன்னோக்கிச் சிந்தனை யோசனைகள் இதற்க வழிவகுத்தன. உலகளாவிய பார்வையாளர்களுக்கு எதிர்காலத்திற்கு-தயாரான அனுபவத்தை உறுதி செய்யும் அதே வேளையில், நுகர்வோருடன் ஆழமான தொடர்புகளை உருவாக்க புதுமையான சந்தைப்படுத்தல் மற்றும் தயாரிப்பு உத்திகளை மேம்படுத்துவது பற்றிய முக்கிய யோசனை இருந்தது. வருண் கோயல், உமாங் ஜெயின் மற்றும் சக்ஷாம் ஜெயின் ஆகியோர் அடங்கிய குழுவினருக்கு, ரூபாய் 150,000 வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு, சாம்சங் எட்ஜ் க்காக 5713 அணிகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், 1432 குழுக்கள் கேம்பஸ் ரவுண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன, அங்கு அவர்கள் ஆராய்ச்சி மற்றும் யோசனையின் மூலம் நிர்வாக வழக்கு சுருக்கங்களை உருவாக்கினர். பின்னர், 59 அணிகள் பிராந்திய சுற்றுக்கு முன்னேறி, சமர்ப்பித்து, விரிவான தீர்வுகளை வழங்கின. இந்தக் குழுவிலிருந்து முதல் 8 அணிகள் மட்டுமே தேசியச் சுற்றுக்கு முன்னேறின, சாம்சங் தலைவர்களிடமிருந்து தங்கள் இறுதி யோசனைகளை முன்வைக்கும் முன் ஒருவருக்கு ஒருவர் வழிகாட்டுதலைப் பெற்றனர்.

2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, சாம்சங் எட்ஜ் இந்தியாவில் முதன்முதலாக அதன் வகையான வளாகத் திட்டமாக வளர்ந்துள்ளது, இது நாட்டின் மிகச்சிறந்த திறமையாளர்களை முன்னோக்கி வரவும், அர்த்தமுள்ள நுண்ணறிவுகளைப் பரிமாறிக் கொள்ளவும் அனுமதிக்கிறது.

# இந்தியர் சுட்டுக்கொலை: கனடாவைச் சேர்ந்த 2 பேர் கைது

சென்னை, 09 நவம்பர் 2024: கனடா நாட்டின் எட்மான்டன் நகரில், 20 வயது இந்திய வாலிபர் ஹர்ஷன்தீப் சிங் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். இதில் கனடா நாட்டைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர். கனடாவில் உள்ள எட்மான்டன் நகரில் வசித்து வந்த ஹர்ஷன்தீப் சிங்கை மர்ம நபர்கள் சுட்டுக்கொலை செய்தனர். இந்திய மாணவர் உயிரிழப்புக்கு, கனடாவில் உள்ள இந்திய தூதரகம் வருத்தம் தெரிவித்துள்ளது. இது குறித்து, இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கடந்த 6ம் தேதி எட்மான்டனில் இந்திய வாலிபர் ஹர்ஷன்தீப் சிங் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம். துயரத்தில் இருக்கும் மாணவரின் குடும்பத்திற்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும். இந்த சம்பவம் தொடர்பாக விசாரித்த கனடா போலீசார், 2 பேரை கைது செய்துள்ளனர். நாங்கள் அதிகாரிகளுடன் தொடர்ந்து பேசி வருகிறோம். இவ்வாறு இந்திய தூதரகம் கூறியுள்ளது. ஏற்கனவே, காலிஸ்தான் பயங்கரவாதி கனடாவில் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் இந்திய அரசு மீது அந்நாட்டு பிரதமர் குற்றம் சாட்டினார். இதனால், இரு நாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 'புதிய யதார்த்தங்கள், புதிய வாய்ப்புகள்': ஏ வி பி என் சவுத் ஆசியா சமிட் 2024 முக்கிய குறுக்கு துறை முயற்சிகளை அறிவிக்கிறது




சென்னை, 09 நவம்பர் 2024: ஆசியாவின் சமூக முதலீட்டாளர்களின் மிகப்பெரிய நெட்வொர்க்கான ஏ வி பி என், அதன் சவுத் ஆசியா சமிட் 2024 ஐ இந்தியாவின் சென்னையில் தொடங்கியது. 'புதிய யதார்த்தங்கள், புதிய வாய்ப்புகள்' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட இந்த உச்சிமாநாடு, காலநிலை நடவடிக்கை, சுகாதார தாக்கம், இளைஞர் அதிகாரமளித்தல் மற்றும் வாழ்வாதாரங்கள் மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்வுகளை முன்வைப்பதன் மூலம் தெற்காசியாவின் சமூக சவால்களை எதிர்கொள்வதில் கவனம் செலுத்துகிறது. இரண்டு நாள் உச்சிமாநாடு செல்வாக்குமிக்க உலகளாவிய தலைவர்கள், சமூக முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பிராந்தியத்தின் மிகவும் அழுத்தமான சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை இலக்காகக் கொண்ட தீர்வுகள் மற்றும் சமூக முதலீடுகளை முன்னெடுப்பதற்கான தாக்கத் தலைவர்களைக் கூட்டும்.

இந்த உச்சிமாநாட்டில் இந்திய அரசு, நிதி ஆயோக், சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம், ப்ளூ பிளானட், ரிலையன்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள் உட்பட உலகெங்கிலும் உள்ள 40 அமர்வுகள் மற்றும் 90 பேச்சாளர்கள் கலந்து கொள்வார்கள். மதிப்பிற்குரிய பேச்சாளர்கள் அடங்குவர்; ஜே. குமாரகுருபரன், கிரேட்டர் சென்னை கார்ப்பரேஷன் (ஜி .சி.சி) ஆணையர்; சுப்ரியா சாஹு, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு; இன்னசென்ட் திவ்யா, ஐ.ஏ.எஸ், நிர்வாக இயக்குநர், நான் முதல்வன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பல.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஏவிபிஎன் தலைமை நிர்வாக அதிகாரி நைனா சுபர்வால் பாத்ரா, "சவுத் ஆசியா சமிட் 2024 சூழல் கண்ணோட்டங்களை மேம்படுத்துவதற்கும் புதுமையான, உள்ளூர்மயமாக்கப்பட்ட தீர்வுகளை இணை உருவாக்குவதற்கும் ஒரு முக்கிய தளமாகும். குறுக்கு-துறை கூட்டாண்மை மற்றும் புதுமையான நிதி மாதிரிகள் மூலம், எஸ் டி ஜி நிதி இடைவெளியைக் குறைக்க மூலதனத்தின் முழு தொடர்ச்சியையும் நாங்கள் திறக்கிறோம். முதன்முறையாக சென்னையில் உச்சிமாநாட்டை நடத்துவது குறிப்பாக உற்சாகமளிக்கிறது - கலாச்சாரம் மற்றும் புதுமைகள் நிறைந்த ஒரு நகரம் - சமூக மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான அளவிடக்கூடிய, பிராந்திய-குறிப்பிட்ட மாதிரிகள் குறித்த உரையாடல் மற்றும் நுண்ணறிவுகளை வினையூக்குவது மட்டுமல்லாமல், தெற்காசியா, ஆசியா மற்றும் உலகிற்கு இடையிலான பரிமாற்றத்தை வளர்ப்பதும் ஆகும். இந்த தனித்துவமான ஒருங்கிணைப்பு தெற்காசியாவை அதன் பலங்களைப் பகிர்ந்து கொள்ளவும், உலகளாவிய சிறந்த நடைமுறைகளிலிருந்து கற்றுக்கொள்ளவும் அனுமதிக்கிறது, அதே நேரத்தில் புதுமை மற்றும் ஒத்துழைப்புக்கான மையமாக இந்தியாவைக் காட்டுகிறது."

உச்சிமாநாட்டின் காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு நிலையான நகர்ப்புற வளர்ச்சிக்கான முன்முயற்சிகளை முன்னிலைப்படுத்தும். ப்ளூ பிளானட் நங்கூர கூட்டாளியாக இருப்பதால், உச்சிமாநாட்டின் முக்கிய அம்சம் சென்னையின் பெருங்குடி டம்ப்சைட்டில் உள்ள கிளைமேட் பாத்ஃபைண்டர் ஒர்க்ஷாப் ஆகும், அங்கு பிரதிநிதிகள் நகர்ப்புற கழிவுகளை நிலையான தீர்வுகளாக மாற்றுவதை நேரடியாக அனுபவிக்க முடியும்.

ப்ளூ பிளானட் நிறுவனத்தின் இணை நிறுவனரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான பிரசாந்த் சிங், "காலநிலை நடவடிக்கைக்கு, குறிப்பாக தெற்காசியாவின் அடர்த்தியான நகரங்களில் கழிவு மேலாண்மை முக்கியமானது. கழிவுகளை ஒரு வளமாகக் கருதுவதன் மூலம், சுழற்சி மற்றும் மறுபயன்பாடு, நிலப்பரப்புகளைக் குறைத்தல் மற்றும் வட்ட பொருளாதாரத்தை இயக்கும் புதுமையான தீர்வுகளை நாம் திறக்க முடியும். ப்ளூ பிளானட்டின் ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்கள் கழிவுகளை ஆற்றல், மறுபயன்பாட்டு பொருட்கள் மற்றும் நிலையான தயாரிப்புகளாக மாற்றுகின்றன. ஏ வி பி என் சவுத் ஆசியா சமிட் 2024 மற்றும் காலநிலை பாதை கண்டுபிடிப்பாளரின் பட்டறை ஆகியவை இந்த நடைமுறைகளை வெளிப்படுத்தவும், நிலையான நகர்ப்புற கழிவு தீர்வுகளில் முதலீடுகளைத் திரட்டவும் ஒரு முக்கிய தளத்தை வழங்குகின்றன. புதுமை மற்றும் சமூக உள்ளடக்கம் மூலம், நெகிழ்வான சமூகங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்கி, சுற்றுச்சூழலுடன் வளர்ச்சியை ஒத்திசைக்கும் அதே வேளையில் காலநிலை பாதிப்பை நிவர்த்தி செய்வதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்."

உச்சிமாநாட்டின் சுகாதார அமர்வுகள் மருத்துவ அணுகலை விரிவுபடுத்துவதற்கான டிஜிட்டல் தீர்வுகள் மற்றும் சமூக அடிப்படையிலான மாதிரிகளை முன்னிலைப்படுத்தும், அதே நேரத்தில் பாலின சமத்துவ விவாதங்கள் பெண்களின் பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை முன்னேற்றுவதற்காக பாலின-லென்ஸ் முதலீடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும். இளைஞர்கள் மற்றும் வாழ்வாதாரப் பாதை டிஜிட்டல் பொருளாதாரத்தில் அர்த்தமுள்ள வேலைவாய்ப்பிற்கான பாதைகளை வலியுறுத்தி, வெற்றிகரமான திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் முயற்சிகளைக் காண்பிக்கும். ஒன்றாக, இந்த கருப்பொருள்கள் மூலோபாய முதலீடு மற்றும் ஒத்துழைப்பு மூலம் தெற்காசியா முழுவதும் நிலையான சமூக தாக்கத்திற்கான ஏ வி பி என் இன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. சவுத் ஆசியா சமிட் 2024 என்பது ஏ வி பி என் இன் கையொப்ப நிகழ்வுகளில் ஒன்றாகும், இது 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தென்கிழக்கு ஆசியா மற்றும் வடகிழக்கு ஆசியா முழுவதும் தொடர்ச்சியான பிராந்திய உச்சிமாநாடுகளின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இவை செப்டம்பர் 2025 இல் ஹாங்காங்கில் நடைபெறும் ஏ வி பி என் உலகளாவிய மாநாட்டில் முடிவடையும், ஆசிய-பசிபிக் தனித்துவமான சவால்களை எதிர்கொள்ள உலகெங்கிலும் உள்ள சமூக முதலீட்டாளர்களை ஒன்றிணைக்கும். பிராந்திய உச்சிமாநாடுகள் உள்ளூர் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்துவதயும், உலகளாவிய சவால்களுக்கு சமூகம் தலைமையிலான தீர்வுகளை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## அமெரிக்க நிறுவனத்திடமிருந்து 498 மில்லியன் மதிப்புள்ள பாசுமதி அரிசிக்கான ஏற்றுமதி ஆர்டரைப் பெற்றிருக்கும் சர்வேஸ்வர் ஃபுட்ஸ்

சென்னை, 09 நவம்பர் 2024: இந்தியாவில் பிரீமியம் பாசுமதி அரிசி வகையினத்தில் முன்னணி சப்ளையர்களில் ஒன்றான சர்வேஸ்வர் ஃபுட்ஸ் லிமிடெட், அமெரிக்காவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றான 5.84 மில்லியன் அமெரிக்க டாலர் (தோராயமாக இந்திய ரூபாய் 498 மில்லியன்) மதிப்புள்ள 5,350 மெட்ரிக் டன் (எம் டி) பாசுமதி அரிசியை வழங்குவதற்கான ஏற்றுமதி ஆர்டரை வெற்றிகரமாக பெற்றுள்ளது. சில்லறை கடைகள், உணவகங்கள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகளில் வலுவான வலையமைப்பு கொண்ட யுஎஸ்ஏ - ன் பெருநிறுவனமாக எஸ்ஐஎஃப்ஓஎல் எல்எல்சி இயங்கி வருகிறது, நியூயார்க் நகரில் 2008 ல் நிறுவப்பட்ட எஸ்ஐஎஃப்ஓஎல் எல்எல்சி, ஒரு புகழ்பெற்ற பிராண்ட் பிரதிநிதியாகவும், விநியோகஸ்தராகவும் அமெரிக்கா முழுவதும் ஒரு வலுவான விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளது. அமெரிக்கா முழுவதும் 1,000 க்கும் மேற்பட்ட தேசிய இனம் சார்ந்த சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் 1,500 உணவகங்களுக்கு இந்நிறுவனம் தனது பொருட்களை விநியோகித்து வருகிறது. அதே நேரத்தில் முக்கிய பல்பொருள் அங்காடிகள் மற்றும் கிளப் கடைகளிலும் வலுவான செயலிருப்பை இது கொண்டிருக்கிறது. இந்நிறுவனத்தின் இயக்க செயல்பாடுகள் யு.எஸ்.டி.ஏ, எஃப்.டி.ஏ, மாநில முகமைகள் மற்றும் முக்கிய துறைமுக அதிகார அமைப்புகள் உள்ளிட்ட முக்கிய அமெரிக்க அரசு நிறுவனங்களின் கடுமையான விதிமுறைகளுக்கு முழுமையான இணக்கநிலையை கொண்டிருக்கின்றன. மேலும் எஃப்.டி.ஏ. அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட உணவு ஆய்வகங்கள் மூலம் தயாரிப்பு பொருட்களின் இணக்க நிலையை இந்நிறுவனம் உறுதி செய்கிறது. எஸ்ஐஎஃப்ஓஎல் எல்எல்சி நிறுவனத்திற்கு அதிக நம்பிக்கைக்குரிய சப்ளையராக சர்வேஸ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் உருவெடுத்துள்ளது. தரம், நிலைத்தன்மை மற்றும் சரியான நேரத்தில் விநியோகம் ஆகிய அம்சங்கள் மீது சர்வேஸ்வர் கொண்டிருக்கும் உறுதியான அர்ப்பணிப்பின் காரணமாக, இந்நிறுவனத்திடமிருந்து தொடர்ந்து, மீண்டும், மீண்டும் ஆர்டர்களைப் பெற்று வருகிறது. இந்த மிகப்பெரிய ஆர்டரை சர்வேஸ்வர் ஃபுட்ஸ் பெற்றிருப்பது, உலகளவில் விநியோகஸ்தர்கள் மற்றும் ரீடெய்லர்களின் அதிக நம்பிக்கைக்குரிய சப்ளையர் என்ற அந்தஸ்தை வலுவாக எடுத்துரைக்கிறது, இந்த சாதனை குறித்து கருத்து தெரிவித்த சர்வேஸ்வர் ஃபுட்ஸின் செய்தித் தொடர்பாளர், "இந்த பெரிய ஏற்றுமதி ஆர்டரை எஸ்ஐஎஃப்ஓஎல் எல்எல்சி நிறுவனத்திடமிருந்து பெற்றதில் நாங்கள் பெரும் உற்சாகம் கொண்டிருக்கிறோம். தரம் மற்றும் சேவையில் மிக உயர்ந்த தரத்தை பராமரிப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பின் காரணமாக, சர்வேஸ்வர் ஃபுட்ஸ் மீது எஸ்ஐஎஃப்ஓஎல் வைத்திருக்கும் ஆழமான நம்பிக்கையை இந்த ஆர்டர் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. எஸ்ஐஎஃப்ஓஎல் உடனான எங்கள் கூட்டாண்மையை வலுப்படுத்துவதிலும், பாசுமதி அரிசி தொழில்பிரிவில் முதன்மை நிறுவனமாக எங்கள் உலகளாவிய விரிவாக்கத்தைத் தொடர்வதிலும் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்." என்று கூறினார்.

## சென்னையில் ரவுடி அறிவழகனை துப்பாக்கியால் சுட்டுப்பிடித்த போலீசார்




சென்னை, 09 நவம்பர் 2024: 2 கொலை வழக்குகள் தொடர்பாக தேடிச்சென்ற போலீசாரை தாக்கிவிட்டு தப்பியோட முயன்ற ரவுடி அறிவழகனை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்,

சென்னை திருமுல்லைவாயலைச் சேர்ந்த ஹரி என்கிற அறிவழகன் வயது 28. சரித்திர பதிவேடு ரவுடியான இவர் மீது தி.மு.க. பிரமுகர் இடி முரசு இளங்கோ, அவரது உறவினர் பழனி, திவாகர் ஆகியோரை கொலை செய்த வழக்குகள் உட்பட திருத்தணி, சோழவரம், ஒட்டேரி ஆகிய போலீஸ் நிலையங்களில் 12 வழக்குகள் உள்ளன.

இளங்கோ மற்றும் பழனி கொலை வழக்குகளில் கடந்த 6 ஆண்டுகளாக ஹரி தலைமறைவாக இருந்துள்ளார். அவரைப் பிடிக்க தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

ரவுடி ஹரி தனது கூட்டாளியைச் சந்திக்க அடிக்கடி ஒட்டேரி பனந்தோப்பு பகுதிக்கு வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்த நிலையில் புளியந்தோப்பு துணை ஆணையரின் தனிப்படை, உதவி போலீஸ் ஆய்வாளர் பிரேம்குமார் தலைமையில் போலீசார் அந்த பகுதிக்கு இன்று காலை சென்றனர்.

அப்போது ஹரி அங்கு வந்த நிலையில் போலீசார் அவரை சுற்றி வளைத்த போது, திடீரென ஹரி தான் மறைத்து வைத்திருந்த கள்ளத் துப்பாக்கியை எடுத்து உதவி போலீஸ் ஆய்வாளரை நோக்கி சுட முயன்றார். அப்போது தற்காப்புக்காக உதவி போலீஸ் ஆய்வாளர் பிரேம் குமார் துப்பாக்கியால் ஹரியின் வலது கால் முட்டிக்கு கீழ் சுட்டு மடக்கிப் பிடித்துள்ளார். காயம் அடைந்த ரவுடி அருகே உள்ள ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டார்.

சிகிச்சைக்கு பிறகு ரவுடி ஹரியை போலீசார் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர். விசாரணையில், பிரபல ரவுடி தொப்பை கணேஷ் மற்றும் சேது ஆகியோரின் கூட்டாளி தான் ஹரி என்பதும் மேலும் பிரபல தாதா ரவுடியான முத்து சரவணனின் எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

மேலும் இவர்கள் ஒருவரை கொலை செய்ய வேண்டும் என்றால், அந்த குறிப்பிட்ட நபருடன் சாலையில் வீண் தகராறில் ஈடுபடுவார்கள். அதன் பின்னர் அவர் அசந்த நேரத்தில் கத்தியை எடுத்து கொலை செய்வது இவர்களது பாணி என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தற்போது இவர்களது எதிர்தரப்புகளான ரவுடி சுரேஷ் மற்றும் முருகேசன் ஆகியோரால் ஹரியின் உயிருக்கு ஆபத்து இருப்பதால், பீகார் மாநிலத்திற்கு சென்று ரூ.35 ஆயிரத்து 500க்கு கள்ளத்துப்பாக்கியை வாங்கி வைத்துள்ளார்.

இதனிடையே ஹரி, கூட்டாளியை சென்னையில் சந்திப்பதற்காக வந்த போதுதான் போலீசார் அவரை சுற்றி வளைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ரவுடி ஹரியிடம் ஓட்டேரி போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

துணிச்சலாக துப்பாக்கி சூடு நடத்தி ரவுடியை பிடித்த உதவி போலீஸ் ஆய்வாளர் பிரேம் குமாருக்கு உயர் அதிகாரிகள் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே கடந்த 2023ம் ஆண்டு விக்கிரவாண்டியில் நடந்த திருட்டு வழக்கில் தலைமறைவான குற்றவாளி மேகநாதனை பிடிக்க பட்டப்பகலில் பிராட்வே அருகே சுமார் 2 கி.மீ. தூரம் ஓடி கைது செய்தார் பிரேம் குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனிதாபிமான அடிப்படையில் சிரியா அதிபருக்கு ரஷ்யா ஆதரவு

சென்னை, 09 நவம்பர் 2024: மத்திய கிழக்கு நாடான சிரியாவை எச்டிஎஸ் கிளர்ச்சி படை கைப்பற்றியதைத் தொடர்ந்து அதிபர் பஷார் அல் ஆசாத் ரஷ்யாவில் தஞ்சம் புகுந்துள்ளார். அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு அளித்துள்ளதாக ரஷ்ய தரப்பு தெரிவித்துள்ளது. ரஷ்ய அதிபர் புதினின் வசிப்பிடமான க்ரெம்ளின் மாளிகை வட்டாரத் தகவலை சுட்டிக்காட்டி இத்தகவலை ரஷ்யாவின் இன்டர்ஃபேக்ஸ், டாஸ், ரியா நோவோஸ்டி பத்திரிகைகள் உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளன. பைடன் வரவேற்பு: இதற்கிடையில் சிரியா விவகாரம் குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கருத்து தெரிவித்துள்ளார். "அதிபர் ஆசாத்தின் வீழ்ச்சி நீதியின் வெற்றி. இது பல ஆண்டுகளாக துன்பப்பட்டுவரும் சிரிய மக்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வரலாற்று வாய்ப்பு. இந்த வாய்ப்பு அவர்கள் தங்கள் தேசத்தை வளமான எதிர்காலத்துக்காக கட்டமைக்க உதவும். அவர்கள் தங்கள் நாட்டை பெருமைமிகு அடையாளமாக மாற்ற உதவும்" என்று அதிபர் பைடன் வரவேற்றுள்ளார். கடந்த 1-ம் தேதி சிரியாவின் அலெப்போ நகரை கைப்பற்றியது. அடுத்தடுத்து பல்வேறு நகரங்களை கைப்பற்றிய எச்டிஎஸ் படை வீரர்கள், நேற்று சிரியா தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றினர். சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்த போது, மனைவி, பிள்ளைகள் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்ற நிலையில், தற்போது ஆசாத்துக்கு மனிதாபிமான அடிப்படையில் ரஷ்யா ஆதரவு அளித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.